**வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனி - 2025**
-------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களிற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இகநி 2 இன் பந்தி 09 இற்கு மாறாக மூலப்பொருட்கள் மற்றும் இறுதிப் பொருட்கள் முறையே ரூபா. 4,827,898 மற்றும் 6,729,463 பெறுமதியானவை தேறிய நிகரத்தக்க பெறுமதி அல்லது கிரயத்தின் குறைந்த பெறுமதியினை கருத்திற் கொள்ளாமல் கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் அத்தகைய பொருட்களிற்கான பௌதீக | கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இருப்பு வேறுபாடுகளுக்கான காரணங்களை முகாமைத்துவம் தற்போது ஆராய்ந்து வருகிறது. இருப்பினும், நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் சேமித்து வைக்கப்பட்டிருந்தமையினால் இந்தப் பொருட்கள் பழுதடைந்திருக்க வாய்ப்புள்ளது.முழு இருப்புக்கும் | இகநி 2 இற்கமைய இருப்புகள் கிரயம் அல்லது தேறிய நிகரக்கத்த பெறுமதியில் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்படுவதை உறுதி செய்வதோடு உண்மைத் தன்மையையும் இணக்கப்பாட்டையும் உறுதிப்படுத்த சீரான பௌதீக மெய்மையாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்கனவே முழுமையான பதிவழித்தல் ஏற்பாடு செய்யப் பட்டுள்மையினால் இப் பற்றாக்குறையினால் நடப்பு ஆண்டின் இலாபத்திலோ அல்லது நிறுத்தி வைத்த வருமானத்திலோ எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். | நடத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறு ரூபா.6,193,396 முன் கொண்டு வரப்பட்ட ஈடுசெய்யப்படாத முன்னைய ஆண்டு வரி இழப்புகள் காணப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா.1,002,364 நடப்பு வருமான வரிச் செலவினமாகவும் ரூபா.1,053,665 செலுத்த வேண்டிய வருமான வரியாகவும் இனங்காணப்பட்டிருந்தது. இத்தகைய நட்டங்கள் நடப்பு ஆண்டின் சட்டபூர்வ வருமானமான ரூபா.962,823 இனை முழுமையாக ஈடுசெய்யப் போதுமானதாக இருந்ததனால் இந்த ஆண்டிற்கான நடப்பு வருமான வரிப் பொறுப்பாக எதுவுமே ஏற்பட்டிருக்கக்கூடாது. உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்குரிய தாமதக்கட்டணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வரிச் செலவினமான ரூபா.1,002,364 இகநி 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் ஏற்பாடுகளுக்கு மாறானதாகும். இவ் விடயமானது நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு செயன்முறையின் பலவீனங்களைக் காட்டுவதுடன் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறன் குறித்தும் கேள்விகளை எழுப்புகிறது. | RAMIS மற்றும் முன்னைய கால நிலுவை உறுதிப்படுத்தல்கள் உட்பட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி தாமதக் கட்டணங்கள் மற்றும் வட்டி உட்பட மொத்த வரிப் பொறுப்பு ரூபா.1,053,666.42 ஆகும். இந்தப் பொறுப்பிற்கான உரிய ஏற்பாடு புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வரிப் பொறுப்புகளை இனங்காணல், நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு நடைமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் வரி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துதல் வேண்டும். |
| (இ) | இகநி 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் ஏற்பாடுகளுக்கு | கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எதிர்கால கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான முன்னெச்சரிக்கை | முன்னைய காலப் பகுதிக்கான வழுக்கள் பின்னோக்கி சீர்செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாறாக முன்னைய நிதியாண்டுக்கான (2024) ரூபா.115,200 தொழில்முறை சேவைக் கட்டணம் நடப்பு ஆண்டின் நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டிருந்தமையினால் 31 திசெம்பர் 2025 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினங்கள் அதிகமாகவும் இலாபம் அதே அளவிற்குக் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளன. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | இகநி 37 இன் தேவைப்பாட்டிற்கு மாறாக 2025 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட கழிவுப் பொருட்களை அளவிடும் சேவைகளுக்கான ரூபா.118,515 தொகையானது நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறான பொறுப்புகளும் செலவுகளும் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. விலைப்பட்டியல் 16 திசெம்பர் 2025 எனத் திகதியிடப்பட்டிருந்தாலும் இது பெப்ரவரி 2026 மாத இறுதியில் எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். எனவே, அந்த நேரத்தில் அதற்குரிய நிலுவைப் பதிவினை மேற்கொள்வது சாத்தியமற்றது. மேலும், நம்பகரமான தகவல்கள் காணப்படாமையினால் செலவினை துல்லியமாகக் கணக்கிட முடியவில்லை. | முகாமைத்துவம் ஒவ்வொரு நிதியறிக்கையிடும் திகதியிலும் விலைப் பட்டியலிடப்படாத அனைத்துச் சேவைகளையும் கண்டறிந்து அவற்றை நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய வேண்டும். |
| (உ) | ரூபா.5,159,044 கிரயமான முழுமையாகத் தேய்மானம் இடப்பட்ட சொத்துக்கள் அவற்றிற்குரிய ரூபா.5,159,044 திரண்ட தேய்மானத்துடன் சேர்த்து லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனியின் (லெகோ) களஞ்சிய சாலைக்கும் ஆன்டே லெகோ மீட்டரிங் கம்பனி (தனியார்) நிறுவனத்தின் வளாகத்திற்கும் மாற்றப்பட்டிருந்தன. இருப்பினும் இகநி 16 தேவைக்கு ஏற்ப இந்தச் சொத்துக்கள் கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நீண்டகாலப் பயன்பாட்டின் காரணமாக இந்தச் சொத்துக்கள் சேதமடைந்தமையினால் அகற்றுவதற்காக இவை வாஸ்கடுவையில் உள்ள களஞ்சியத்திற்கு மாற்றப்பட்டன என்பதைக் கவனத்தில் கொள்ளவும். லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனிக்கு எந்தச் சொத்துக்களும் மாற்றப்படவில்லை. இந்தச் சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டமையினால் கம்பனியின் நிதி நிலைமையில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது. | அகற்றப்பட்ட சொத்துக்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் இருந்து உரிய நேரத்தில் நீக்கப் படுவதையும் நிலையான சொத்துப் பதிவேடு சரியாக இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுவதையும் முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றின் மீதியாக ரூபா.19,686,766 வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொடர்புடைய மீதி ரூபா.19,543,736 ஆக காணப்பட்டிருந்தமையினால் இரு கூற்றுக்களுக்குமிடையே ரூபா.143,030 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்பு முதலீடுகளின் அசைவுகள் ஆகியவை காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் முடிவு செய்வதற்கு முன்னதாக காசு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு ஏதேனும் வேறுபாடுகள் இனங்காணப்படின் அவை சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை மின்சார சபையிடமிருந்து கம்பனியினால் பெறவேண்டிய மீதி மற்றும் இலங்கை மின்சார சபையால் அறிக்கையிடப்பட்ட தொடர்புடைய செலுத்த வேண்டிய மீதிக்கும் இடையிலான ரூபா.1,530,624 வேறுபாடு மற்றும் லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (தனியார்) கம்பனியிடமிருந்து (லெகோ) பெறவேண்டிய மீதிக்கும் லெகோ நிறுவனத்தின் அறிக்கையிடப்பட்ட அதற்குரிய செலுத்தவேண்டிய மீதிக்கும் இடையிலான ரூபா.354,360 வேறுபாடு ஆகியவை உள்ளடங்கலாக தொடர்புடைய தரப்பினரின் மீதிகளில் இணக்கம் செய்யப்படாத மொத்த வேறுபாடு ரூபா.1,884,984 காணப்பட்டிருந்தது. | கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 2026 ஆம் நிதியாண்டில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | தொடர்புடைய தரப்பினரின் மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். துல்லியமான நிதி அறிக்கையிடலை உறுதிசெய்வதற்காக மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் நடப்பு ஆண்டிற்கான முன்பண வருமான வரி ரூபா.161,984 ஆகும். ஆயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா.145,271 மட்டுமே இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பண வருமான வரி ரூபா.16,713 ஆல் குறைத்துக் காட்டப் பட்டிருந்ததுடன் நடப்புச் சொத்துக்களும் ஆண்டிற்கான வட்டி வருமானமும் அதே அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | சரியான AIT தொகை ரூபா. 159,438 என்பதையும் அதன்படி குறைவாகக் காட்டப்பட்ட தொகை ரூபா. 16,407 என்பதையும் கவனத்தில் கொள்ளவும். இது நடப்பு நிதியாண்டில் சீராக்கப்படும். | முற்பண வருமான வரிப் பதிவுகள் இணக்கம் செய்யப்படுவதோடு சரியான வரிச் சலுகை இனங்காணப்படுவதுடன் சரியான நிதி அறிக்கையிடலை உறுதி செய்வதற்காக மீளாய்வுக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 2.1 இல் 2013 ஆம் நிதியாண்டில் கம்பனி மின் விநியோகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ஆகிய தனது முதன்மை வணிகச் செயற்பாட்டினை நிறுத்தியுள்ளதாக விபரிக்கப்பட்டிருந்தது. குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படி கம்பனிக்கு 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறு ரூபா.19,021,671 திரண்ட நட்டம் ஏற்பட்டிருந்துடன் அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கு வரிக்குப் பின் நட்டமாக ரூபா.39,542 இனை பதிவு செய்திருந்தது. ஆயினும் 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறு ரூபா.5,979,329 தொகையான சாதகமான தேறிய சொத்து நிலைமையினை பதிவு செய்திருந்த போதிலும் அதன் தேறிய சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனத்தில் அரைவாசியை விடக் குறைவாகவே காணப்படுகின்றமை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 220 இல் வரையறுக்கப் பட்டுள்ளவாறு மூலதனத்தில் ஒரு கடுமையான இழப்பு நிலைமையைக் காட்டுகின்றது. கம்பனியின் முதன்மை வணிகச் செயற்பாடு நிறுத்தப்பட்டமை உள்ளடங்கலான இத்தகைய நிலைமைகள் கம்பனியின் நிலைத்திருத்தலில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மையினைக் காட்டுவதுடன் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மையில் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது. எவ்வாறாயினும், அதே குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு கம்பனி தனது தாய்க் கம்பனியிடமிருந்து தொடர்ச்சியாக நிதியுதவியைப் பெற்று வருவதால் கம்பனி தனது நிதிக் கூற்றுக்களைத் தொடர்ந்தியங்கும் அடிப்படையில் தயாரித்திருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துக்கள் எவையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை மதிப்பிட வேண்டும். கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக செயற்படுவதனை உறுதி செய்தல் வேண்டும். நிலைபேறான வணிக மீளமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் நிதிச் நிலைத்தன்மையினை உறுதி செய்வதற்காக தாய்க் கம்பனியிடமிருந்து ஆவணப்படுத்தப்பட்ட நீண்டகால நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2025 இல் உள்ளவாறான ரூபா.9,458,986 பெறுமதியான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் முழுமையாக பதிவழிப்புச் செய்யப்படாது நீண்டகாலமாக நிலுவையாகக் காணப்பட்டிருந்தது. விரிவான கடன்பட்டோர் பதிவுகள், வயது பகுப்பாய்வுகள் மற்றும் ஆதார ஆவணங்கள் போதுமான முறையில் பராமரிக்கப்படாதமையினால் எந்தவொரு தொகையும் மீளப் பெறப்படாததுடன் இது கம்பனியின் வினைத்திறனான கண்காணிப்பு மற்றும் நிலுவைத் தொகைகளினை மீளப்பெறும் ஆற்றலினை மட்டுப்படுத்துகின்றது. | கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தேவையான தகவல்கள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் நிலுவையிலுள்ள அனைத்துத் தொகைகளையும் தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவையிலுள்ள அனைத்துப் பெற வேண்டிய தொகைகளையும் மீளப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 220 ஆம் பிரிவு | கம்பனியின் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாக காணப் பட்டிருந்த போதிலும் குறிப்பிடப்பட்ட பிரிவின் பிரகாரம் சபையினால் மேலதிக பொதுக் கூட்டத்திற்கான அழைப்பு விடப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துக்கள் எவையும் வழங்கப் பட்டிருக்கவில்லை. | கம்பனிச் சட்டத்தின் தேவைக்கேற்ப சபையினால் உடனடியாக விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டி கம்பனியின் நிதி நிலைமையை மதிப்பிடுவதுடன் மூலதன மறுசீரமைப்பு அல்லது நிறுவனத்தைக் கலைத்தல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.39,542 (வரிக்குப் பின்) தொகை நட்டமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.1,516,232 தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா.1,555,774 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் வருமான வரிச் செலவினமாக ரூபா.1,002,364 தொகை அறவிடப்பட்டமையே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

அ) கம்பனியின் நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.28 முதல் 1.26 வரை குறைவடைந்திருந்தது.

ஆ) கம்பனியின் உரிமை மூலதனத்திற்கான வருவாய் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 25.2 சதவீதத்திலிருந்து (0.66) சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (தனியார்) நிறுவனம் (லெகோ) தனது மொத்தக் கூறப்பட்ட மூலதனமான ரூபா. 25 மில்லியனை லெகோ திட்டத்தில் முதலீடு செய்தது. ஆயினும், இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் டெலிகாம் ஆகியவற்றிற்குச் போட்டியாளர்களாக செயற்படும் தற்போதைய கொங்கிரீட் கம்ப விநியோகஸ்தர்களின் அலகிற்கான உற்பத்தி ஏற்பாடுகளில் தங்கியிருந்ததன் காரணமாக பொருத்தமான ஒரு வணிக தந்திரோபாயத்தினை நடைமுறைப்படுத்த திட்ட முகாமைத்துவம் தவறியிருந்தது. போட்டிச் சந்தைச் சூழலையோ அல்லது விநியோகஸ்தர்களின் முரண்பாடான அக்கறையினையோ முகாமைத்துவம் போதுமானதாக மதிப்பிடவில்லை. இதன் விளைவாக தொழில்நுட்பக் குறைபாடுகளுடைய கம்பங்கள் விநியோகிக்கப்பட்டு பின்னர் அவை CEB மற்றும் டெலிகம் நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. இந்த தந்திரோபாய தோல்வியினால் இத் திட்டம் வணிக ரீதியாகச் செயற்பட | கவனத்தில் கொள்ளப்பட்டது. முகாமைத்துவம் கம்பனியின் தற்போதைய செயற்பாடுகளை மீளாய்வு செய்து வருகிறது. இதனடிப்படையில் வணிகத்தைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது செயற்பாடுகளை நிறுத்திவிட்டு கம்பனியினை கலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதா என்பதனைத் தீர்மானிக்கும். | திட்டத்தின் தந்திரோபாயத் தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்கும் திட்ட ஆளுகையினை பலப்படுத்துவதற்கும் இது போன்ற முதலீட்டுத் தோல்விகள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

முடியாததாகவும் கம்பனியின் ரூபா.25 மில்லியன் முதலீடு முழுமையாக இழக்கப்படவும் காரணமாக அமைந்திருந்தது.

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உபாய திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலக் கிரமத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | உபாய திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |